

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்


-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2018 AUGUST

மலர்: 11 இதழ்: 11 ஆகஸ்ட் 2018 விலை: ரூ. 10




நிச்சயமாக இறைவன் கொசுவையோ அதன் மேலுள்ளதையோ (கிருமிகளையோ) உதாரணமாகக் கூற வெட்கப்படமாட்டான் (குர்ஆன் 2:26)











என் உறிஞ்சுகுழல்









# நாயை நக்க விடாதே!

வீட்டுப்பிராணி போல நாயை வளர்ப்பதற்கும் அது வாய்வைத்த நீரை பயன்படுத்துவதற்கும் இஸ்லாத்தில் தடை உள்ளது. கீழ்கண்ட நபிமொழிகளில் இருந்து இதை அறியலாம்:

- ''எந்த வீட்டில் நாயோ உருவப்படமோ உள்ளதோ அங்கு வானவர்கள் நுழைய மாட்டார்கள்'' (புகாரி, முஸ்லிம்)
- “உங்களில் ஒருவரது பாத்திரத்தில் நாய் வாய் வைத்துவிட்டால் அவர் அதைக் கொட்டிவிட்டு ஏழு தடவை பாத்திரத்தைக் கழுவிக்கொள்ளட்டும்” (நூல் : முஸ்லிம்)

### உண்மைப்படுத்தும் நவீன மருத்துவ அறிவியல்

நாயின் வாயில் உள்ள கிருமிகள் பற்றிய ஆய்வு செய்த லண்டன் க்வீன் மேரி பல்கலைக்கழகத்தின் நச்சுயிரியல் மற்றும் நுண்மவியல் (Virology and bacteriology) பேராசிரியர் ஜான் ஆக்ஸ்போர்ட் கூறும்போது, '' நாய்கள், வாழ்க்கையின் பாதி நாட்களை பல அசுத்தமான இடங்களை முகர்ந்து வருவதால், அதன் வாய் முழுவதும் பல வகையான அசுத்தங்களும் கிருமிகளும் நிறைந்து காணப்படுகின்றன.

நாய்களை முத்தமிடுவது, அவைகளின் நாக்கால் நம்மை நக்க விடுவதின் மூலம் பல கொடுமையான கிருமிகள் மனிதனை பாதிக்கின்றன. நாயின் வாய் மூலம் பரவும் கிருமிகளின் சில:

- Staphylococcus Aureus
- Capnocytophaga Canimorsus

நாய்களைப் பொறுத்தவரை இந்த பாக்டீரியாக்கள் அவற்றின் உடலுக்கு ஊறு செய்வதில்லை. ஆனால் மனித உடலுக்கு அவை பகிரப்படும்போது பெரும் பாதிப்புகளை உண்டாக்குகின்றன. ஏற்கனவே உள்ள புண்களை நாய்கள் நக்குவதன் மூலம் இன்னும் வீரியமாக தோல் நோய்கள் உருவாகின்றன. அதனால் ஒரு காலை வெட்டி எடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார் ஒருவர்.



கையில் உள்ள காயத்தில் நாய் நக்கியதால் ஏற்பட்ட விளைவு

நன்றி : *http://www.davidwolfe.com/never-let-dog-lick-you/*

(7 ஆம் பக்க செய்திகளையும் படியுங்கள்)

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

# THIRU QURAN NARCHEYDHI MALAR

மலர்: 11 இதழ்: 11 ஆகஸ்ட் 2018 விலை: ரூ. 10

## பொருளடக்கம்

அற்பஜீவிக்குள் அசரவைக்கும் அற்புதங்கள் -2
உண்மைக் கடவுளை அறிய உரைகல்! -5
நாயோடு பழகுதல் நல்லதல்ல! -7
மோட்சத்திற்கு வழி ஏகஇறைக் கொள்கை மட்டுமே! -8
வீடுவரை ரகு! (தொடர்ச்சி) -10
எச்சிலும் எரிச்சலும்! -12
தூய்மை பேணுதல் ஒரு ஆன்மீகக் கடமை -13
கத்னா எனும் விருத்தசேதனம் -15
பிணவறைக்குள் (ஆழசவரயசல) படிப்பினைகள்! -16
வாசகர் எண்ணம் -18
வானவர்கள் பற்றிய சில தகவல்கள் -19
திருக்குர்ஆன் கற்றுத்தரும் பிரார்த்தனைகள் -21
வானவர்களின் செயல்பாடுகள் -22
இஸ்லாமிய சகோதரர்கள் கவனத்திற்கு -23

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை **9886001357** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்ப வேண்டும்.
- ஓராண்டு சந்தா **Rs.120-**
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் தொடர்பு எண்: **08867971835**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017


**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

**www.quranmalar.blogspot.com**

# அற்பஜீவிக்குள் அசரவைக்கும் அற்புதங்கள்

கொசு... நமது பார்வையில் மிகமிக ஒரு அற்பமான ஜீவி!

விலையற்ற ஒன்று. அன்றாடம் நம்மைக் கடிக்கிறது. ஒரே அடியில் அடித்துச் சட்னியாக்கி விடுகிறோம். சாம்பிராணி, புகைபோடுதல்,



கொசுவத்திச்சுருள், கொசு விரட்டி மாட், கொசுவடிக்க பாட், கொசுவலை என இதன் தொல்லைகளை தவிர்க்கும் முயற்சியில் அன்றாடம் நம் அறிவியலும் தொழில் நுட்பமும் வர்த்தகமும் வளர்ச்சி கண்டு வருகின்றன. மட்டுமல்ல, இந்த கொசுத்தொல்லை காரணமாக நமது ஆரோக்கியம் மற்றும் சுற்றுப்புற சூழல் விழிப்புணர்வும் நடவடிக்கைகளும் எல்லாமே வளர்ச்சி கண்டு வருகின்றன என்பதும் உண்மை.

உங்கள் கைகளுக்கிடையில் எளிதாக நீங்கள் அடித்துக் கொல்லும் இந்த அற்ப ஜீவி எவ்வளவு அரிய அற்புதங்களை, அபாரமான தொழில் நுட்பங்களைத் தாங்கி நிற்கும் படைப்பினம் என்பதை எப்போதேனும் நீங்கள் சிந்தித்ததுண்டா? உங்களைப் படைத்தவனின் படைப்பாற்றலை உங்களுக்கு உணர்த்தத்தான் உங்களை நோக்கி அது வந்தது என்று நீங்கள் சிந்தித்ததுண்டா?


**அற்பஜீவிக்குள் அற்புதங்கள்:**

- அதன் தும்பிக்கையில் ஒன்றல்ல... ஆறு ஊசிகள்!
- அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி அலுவல்கள்..
- அவற்றில் ஒன்றின் வழியாகத்தான் இரத்தம் உறிஞ்சப்படுகிறது...

இரத்தத்தின் பிசுபிசுப்பு (viscosity) நாம் அறிந்ததே. அது எவ்வாறு அந்த ஊசியில் அமைந்துள்ள நுண் குழாயின் மூலம் உறிஞ்சப்படுகிறது? -

இதை சிந்தித்தாலே ஆச்சரியத்தின் விளிம்புக்கு சென்று விடுகிறோம்.

இவைமட்டுமா அந்த அற்பஜீவிக்குள் அமைந்துள்ள அற்புதங்கள்? மேலே படியுங்கள்...



- அதற்கு அதன் தலையில் 100 கண்கள்.
- அதன் வாயில் 48 பற்கள்.
- அதன் உடலில் மாறுபட்ட மூன்று இதயங்கள்.
- ஒவ்வொரு பக்கத்திலும் மூன்று இறக்கைகள்.
- எக்ஸ்ரே கருவி போன்ற நுண்ணிய தர்மோமீட்டர் பொருத்தப்பட்ட சிவப்பு நிறத்தில் ஒரு நுண்ணிய கருவி அதனுள் படைக்கப்பட்டுள்ளது. அதன் வேலை அது மனித உடலில் இருளில் வந்து அமர்ந்து இரத்தத்தை உறிஞ்சும் போது யாரும் கண்டு கொள்ள முடியாத அளவுக்கு மனிதனுடைய நிறத்திற்கேற்றவாறு தன் நிறத்தை மாற்றிக்கொள்வது!.

- மனிதனின் இரத்த வாசனையை 60 கி.மீட்டர் தொலைவிற்கு அப்பாலிருந்து நுகர்ந்து தெரிந்து கொள்ளும் அற்புத ஆற்றலை அது பெற்றிருக்கிறது.


## மனித இரத்தம் குடித்த கொசு நமது கைகளில் அடிபடாமல் தப்பிப் பறக்கும் மர்மம்:

கொசு மனிதனின் இரத்தம் குடித்தபின் அதன் எடை இரண்டு அல்லது மூலம் மடங்கு அதிகமாகிவிடும்.இந்த அதிக எடையை தூக்கிகொண்டு பறப்பதற்கு பிற பூச்சி,மற்றும் ஈக்கள் தங்களின் கால்களால் உந்தித்தள்ளிய பிறகே சிறகை அடிக்க ஆரம்பிக்கும். ஆனால் கொசு, தன் நீண்ட கால்களால் தோல் பரப்பை அழுத்தாமல் தங்களின் சிறகுகளை அதி வேகத்தில் அடித்து ஹெலிகாப்டர் போன்று அலக்காக எழும்புகின்றன. ஆம், அது அதி நவீன தொழில் நுட்பம்... யாருக்கு? நமக்கு! ஆனால் கொசுவைப் பொறுத்தவை ஆதிகால தொழில் நுட்பம்!

### பிளாஸ்மோடியம் (Plasmodium)

- இவை எல்லாவற்றிற்கும் மேலாக அதன் முதுகின் மேல் கண்களால் பார்க்கமுடியாத அளவுக்கு மிகச்சிறிய ஒரு செல் உயிரியாகிய “பிளாஸ்மோடியம்” என்ற ஒட்டுண்ணி உள்ளது. மனிதர்களுக்கு நோயை பரப்புவது அற்பமான கொசுவும் அதைவிட அற்பமாக கொசுவிலேயே இருக்கும் பிளாஸ்மோடியம் ஒட்டுண்ணி என்ற உயிரியுமே! அது இறைவனின் திருமறையின் அற்புதச்செய்தியை முன்னறிவிப்பதாக உள்ளது.

● **நிச்சயமாக, அல்லாஹ் கொசுவையோ அதற்கு மேலுள்ளதையோ உவமானமாகக் காட்டுவதற்கு வெட்கப்படுவதில்லை. நம்பிக்கை கொண்டவர்களோ நிச்சயமாகத் தம் இறைவனிடமிருந்து வந்த சத்தியமே இது என்று புரிந்து கொள்வார்கள். ஆனால், நிராகரிப்போரோ “இத்தகைய (அற்ப) உதாரணங்களைக் கொண்டு அல்லாஹ் எதை நாடுகின்றான்?”**



**எனக் கூறுவார்கள். ”(திருக்குர்ஆன் 2:26)**

இந்த வசனத்தில் கூறப்பட்ட ”ஃபவ்கஹா” (மேலுள்ளது) என்ற பதம் சிந்திக்கப்பட வேண்டிய ஒன்று. கொசுவை விட அற்பமானது இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஒரு செல் உயிரியாகிய “பிளாஸ்மோடியம்” எனும் ஒட்டுண்ணி (parasite). மலேரியா, டெங்கு போன்ற கொடிய நோய்கள் கொசுவின் மூலமாகப் பரவுவதை நாம் அறிவோம். அற்பமான கொசுவுக்குள் அடங்கியுள்ள நுட்பங்களை எலேக்ட்ரோன் மைக்ரோஸ்கோப் போன்ற அதிநவீன கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர்தான் நாம் அறிய வருகிறோம்.

அதேபோல காலம் செல்லசெல்லத்தான் இந்த ஒட்டுண்ணிகளின் படைப்பு ரகசியங்களை நாம் அறியவருவோம். நமது குறுகிய அறிவுக்கு இன்னும் அவை எட்டவில்லை என்பதற்காக அந்த படைப்பினங்களை உதாரணமாகக் கூற இறைவன் வெட்கப்பட வேண்டுமா என்கிறான். நீங்கள் அந்தப் படைப்பு இரகசியங்கள் இன்னும் அறியாமல் இருப்பது எனக்கு ஒரு பொருட்டல்ல என்பதைப்போல் உள்ளது இந்த வசனம்.

இந்த இறை வசனம் எப்போது அருளப்பட்டது தெரியுமா? இணைவைப்பவர்களுக்கு எடுத்துக்காட்டாக இறைவன் *22:73*-வது வசனத்தில் ஈயையும், *29:41*-வது வசனத்தில் சிலந்தியையும் உவமையாகக் கூறுகிறான். இதைக் கேட்ட இணைவைப்பாளர்கள் ஈயும், சிலந்தியும் அல்லாஹ்வின் வேதத்தில் கூறப்படுகின்றனவா? என்று இளக்காரமாகக் கேட்டனர்.அப்போது தான் இறைவன் இவ்வசனங்களை அருளி இப்படிக் கூறினான்.

அதாவது ஈயானாலும் சிலந்தியானாலும் கொசுவானாலும் உங்களுக்கு அற்பமானவையாக இருக்கலாம். அவை தாங்கி நிற்கும் அற்புதங்களும் தொழில்நுட்பங்களும் அற்பமானவை அல்ல. மனிதகுலம் அனைத்தும் சேர்ந்து நூற்றாண்டுகள் செலவிட்டாலும் அவைபோன்ற அற்புதங்களை உங்களால் உண்டாக்க முடியாது. அவை தாங்கிநிற்கும் தொழில் நுட்பங்களின் அருகில் கூட நீங்கள் நெருங்கமுடியாது. உங்கள் இளக்காரம் அறியாமையின் அப்பட்டமான வெளிப்பாடு அல்லாமல் வேறு என்ன என்பதைப் போல் அமைந்துள்ளது என்கிறது இந்த சவுக்கடி வசனம்!

# தற்பெருமை தவிர்!

நபி (ஸல்) அவர்கள் "யாருடைய உள்ளத்தில் அணுவளவு தற்பெருமை இருக்கிறதோ அவர் சொர்க்கத்தில் நுழையமாட்டார்" என்று கூறினார்கள். அப்போது ஒரு மனிதர், "தமது ஆடை அழகாக இருக்க வேண்டும் தமது காலணி அழகாக இருக்க வேண்டும் என ஒருவர் விரும்புகிறார். (இதுவும் தற்பெருமையில் சேருமா?)" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "இறைவன் அழகானவன் அழகையே அவன் விரும்புகின்றான். தற்பெருமை என்பது (ஆணவத்தோடு) உண்மையை மறுப்பதும் மக்களைக் கேவலமாக மதிப்பதும்தான்" என்று கூறினார்கள்.

அறிவிப்பு: அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) நூல்: முஸ்லிம்

# உண்மைக் கடவுளை அறிய உரைகல்!

பெரும்பாலான ஆத்திகர்களும் சரி, கடவுளை மறுக்கும் நாத்திகர்களும் சரி, கடவுள் என்றால் தன்னைப் போன்ற ஆனால் சில விசேஷ குணங்களும் சக்திகளும் கொண்ட மனிதனே என்பதுபோல் கற்பனை செய்துகொண்டுள்ளார்கள். ஆனால் பகுத்தறிவு கொண்டு சிந்திக்கும்போது இம்மாபெரும் பிரபஞ்சத்தில் காணப்படுகின்ற அணு முதல் அண்டசராசரங்களும் அவற்றுக்கு அப்பாலுள்ள அனைத்தையும் படைத்ததோடு நில்லாமல் அவற்றை மிகமிக நுணுக்கமாகவும் பக்குவமாகவும் இயக்கி பரிபாலித்து வருகின்றவன் எவனோ அவனையே கடவுள் அல்லது இறைவன் என்று கூறமுடியும் என்பதை அறியலாம். அப்படிப்பட்ட பிரம்மாண்டமானவனை ஆறடி உயரமும் அற்ப ஆயுளும் கொண்ட மனிதனோடு ஒப்பீடு செய்வது அறியாமையே என்பதை ஆராய்வோர் விளங்கலாம்.

அவ்வாறு இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவன் எவனோ அவன் மட்டுமே நாம் வணங்குவதற்குத் தகுதியானவன். அவனல்லாத எவையும் அவனுடைய படைப்பினங்களோ அல்லது மனிதர்களின் கற்பனையில் உருவானவையோ ஆகத்தான் இருக்கமுடியும். உண்மை இறைவனால் மட்டுமே நமது பிரார்த்தனைகளை செவிமடுக்கவோ அல்லது பதிலளிக்கவோ இயலும். அவனது தன்மைகள் பற்றியும் இதோ திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

- **நபியே நீர் கூறுவீராக! அல்லாஹ் அவன் ஒருவனே. அவன் தேவைகள் ஏதும் இல்லாதவன். அவன் எவரையும் பெற்றெடுக்கவில்லை அவனையும் யாரும் பெற்றெடுக்கவில்லை. அன்றியும் அவனைப்போல் எவரும் எதுவும் இல்லை. (திருக்குர்ஆன் 112: 1-4)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

அதாவது ஏகனான தனித்தவனான அந்த இறைவன் அவனது படைப்பினங்களைப் போன்றவன் அல்ல. படைப்பினங்களைப் போல உணவு, நீர், காற்று போன்ற எந்தவிதமான தேவைகளும் இல்லாதவன். யாரையும் எதையும் சார்ந்து நில்லாதவன். மனிதர்களுக்கும் இன்னபிற ஜீவிகளுக்கும் உள்ளதுபோல் அவனுக்கு முன்னோர்களும் பின்தோன்றல்களும் கிடையாது. அவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். எல்லாக்காலங்களிலும் உள்ளவன், என்றென்றும் நிலைத்திருப்பவன். அவனைப்போல் இங்கு எதுவும் எவரும் கிடையாது.

அந்த இறைவனை இடைத்தரகர்கள் இன்றி நேரடியாகவும் வீண் சடங்குசம்பிரதாயங்கள் இன்றியும் வழிபடவே இறைத்தூதர்களும் இறைவேதங்களும் நமக்குக் கற்றுத் தருகின்றன. ஆனால் அந்த உண்மையான இறைவனை விட்டுவிட்டு அவன் அல்லாதவற்றை மக்கள் வணங்க முற்படும்போது இறைவனைப் பற்றிய மதிப்பும் மரியாதையும் மனித உள்ளங்களில் இருந்து அகன்றுபோவதால் சமூகத்தில் பாவங்கள் பெருகக் காரணமாகிறது. மேலும் கடவுளை பல்வேறு விதமாக சித்தரித்து

*இடைத்தரகர்கள் மக்களை சுரண்டுவதற்கும் மூடநம்பிக்கைகளைப் பரப்புவதற்கும் இச்செயல் காரணமாகிறது. மனிதகுலத்தில் சமத்துவமும் சகோதரத்துவமும் மறைந்து ஜாதிகளும் பிரிவினைகளும் தீண்டாமைக் கொடுமைகளும் சமூகத்தில் உடலெடுக்கின்றன. பலரை நாத்திகத்தின்பால் தள்ளுவதற்கும் இதுவே காரணமாகிறது.*

*இவ்வாறு பற்பல குழப்பங்களுக்குக் காரணமாகும் இந்தப் பாவம் இஸ்லாமிய வழக்கில் ஷிர்க்' (இணைவைத்தல் அல்லது இணைகற்பித்தல்) என்று அறியப்படுகிறது. இப்பாவத்தை இறைவன் தனது இறுதிவேதத்தில் வன்மையாகக் கண்டிக்கிறான்:*

- **“...நிச்சயமாக இறைவனுக்கு இணைவைத்தல் மாபெரும் பாவமாகும்.. (திருக்குர்ஆன் 31:13)**

- **“நிச்சயமாக இறைவன் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கமாட்டான். இதைத்தவிர, (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான். யார் இறைவனுக்கு இணைவைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக மிகவும் பெரிய பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள்.“ (திருக்குர்ஆன் 4:48)**

- *நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் :*

*யார் அல்லாஹ்வுக்கு எதையும் இணைகற்பிக்காமல் அவனை சந்திக்கிறாரோ அவர் சுவர்க்கம் புகுவார். யார் இணை கற்பித்தவராக சந்திக்கிறாரோ அவர் நரகம்புகுவார்.*

*அறிவிப்பு : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) நூல் : புகாரீ (1238)*

## உண்மைக் கடவுள் யார் சிந்திப்பீர்

*இன்று பெரும்பாலான மக்கள் ஈடுபட்டிருக்கும் இந்த இணைவைக்கும் பாவத்தை செய்வோரை சிந்திக்கச் சொல்லி இறைவன் அழைக்கிறான். அன்றாடம் அம்மக்கள் அனுபவிக்கும் அருட்கொடைகளையும் அவர்களைச் சுற்றி நடக்கும் அற்புதங்களையும் சுட்டிக்காட்டி தன்னை பகுத்தறியுமாறு இறைவன் கூறுகிறான்:*

- **“உங்களுக்கு வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும் உணவளிப்பவன் யார்? (உங்கள்) செவிப்புலன் மீதும், (உங்கள்) பார்வைகளின் மீதும் சக்தியுடையவன் யார்? இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றையும், உயிருள்ளவற்றிலிருந்து இறந்தவற்றையும் வெளிப்படுத்துபவன் யார்? (அகிலங்களின் அனைத்துக்) காரியங்களையும் திட்டமிட்டுச் செயல்படுத்துபவன் யார்?” என்று(நபியே!) நீர் கேளும். உடனே அவர்கள் “அல்லாஹ்” என பதிலளிப்பார்கள் “அவ்வாறாயின் அவனிடம் நீங்கள் பயபக்தியுடன் இருக்க வேண்டாமா?” என்று நீர் கேட்பீராக. உண்மையாகவே அவன் தான் உங்களைப் படைத்துப் பாதுகாக்கும் அல்லாஹ் இந்த உண்மைக்குப் பின்னரும் (நீங்கள் அவனை வணங்காவிட்டால்) அது வழிகேட்டைத் தவிர வேறில்லை (இப்பேருண்மையை விட்டு) நீங்கள் எங்கு திருப்பப்படுகிறீர்கள்? (திருக்குர்ஆன் 10:31. 32**

- **(நபியே! இவர்களிடம்) கூறும்: இறைவனை விட்டுவிட்டு எவற்றை நீங்கள் அழைக்கின்றீர்களோ, அவை எப்படிப்பட்டவை என்று நீங்கள் எப்போதாவது கண்களைத் திறந்து பார்த்ததுண்டா? சற்று எனக்குக்**

**காண்பித்துத் தாருங்கள். அவர்கள் பூமியில் எதையாவது படைத்திருக்கின்றார்களா? அல்லது வானங்களைப் படைத்து நிர்வகிப்பதில் அவர்களுக்கு ஏதேனும் பங்கு இருக்கிறதா? நீங்கள் உண்மையாளர்களாய் இருந்தால், இதற்கு முன் வந்த ஏதேனும் வேதமோ அல்லது எஞ்சியுள்ள ஏதேனும் ஞானமோ (இந்தக் கொள்கைகளுக்கு ஆதாரமாக) உங்களிடம் இருப்பின் அவற்றை என்னிடம் கொண்டு வாருங்கள். (திருக்குர்ஆன் 46:4)**

# நாயோடு பழகுதல் நல்லதல்ல!

இறைவன் கற்பிக்கும் ஏவல்- விலக்கல்களை ஏற்று வாழ்வதே இஸ்லாம் எனப்படும். இறைவன் ஒரு விஷயத்தை வேண்டாம் என்று தடை செய்தால் அது முழு மனிதகுலத்திற்கும் கேடானதாகவே அமையும். இன்றில்லாவிடினும் காலம் அதைத் தெளிவு படுத்தும்.

வீட்டுப்பிராணி போல நாயை வளர்ப்பதற்கும் அது வாய்வைத்த நீரை பயன்படுத்துவதற்கும் இஸ்லாத்தில் தடை உள்ளது. கீழ்கண்ட நபிமொழிகளில் இருந்து இதை அறியலாம்:

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

- "எந்த வீட்டில் நாயோ உருவப்படமோ உள்ளதோ அங்கு வானவர்கள் நுழைய மாட்டார்கள்"

அறிவிப்பவர்:அபூ தல்ஹா(ரலி), நூல்கள்: புகாரி, முஸ்லிம். ,

- "நாய் வளர்ப்பவர்கள் ஒவ்வொரு நாளும் இரண்டு கீராத் (இரு மடங்கு உஹது மலையளவு) நன்மையை (புண்ணியங்களை) இழக்கின்றனர்

அறிவிப்பவர்:அப்துல்லாஹ் பின் உமர்(ரலி), நூல்: புகாரி.

- “உங்களில் ஒருவரது பாத்திரத்தில் நாய் வாய் வைத்துவிட்டால் அவர் அதைக் கொட்டிவிட்டு ஏழு தடவை பாத்திரத்தைக் கழுவிக்கொள்ளட்டும்.” அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி) நூல் : முஸ்லிம்

- “நாய் வாய்வைத்துவிட்ட உங்களது பாத்திரத்தைச் சுத்தம் செய்யும் முறை யாதெனில், அதை ஏழு தடவை தண்ணீரால் கழுவுவதாகும். முதல் தடவை மண்ணிட்டுக் கழுவ வேண்டும்”

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி) நூல் : முஸ்லிம்

மேற்கண்ட செய்திகளின் வாயிலாக நாய் வளர்ப்பதற்கு இஸ்லாத்தில் அனுமதி இல்லை என்பதை நேரடியாக விளங்கிக் கொள்ளலாம்.

குறிப்பு: அதேவேளையில் விவசாயம், வேட்டையாடுதல் போன்ற காரணங்களுக்காக நாயை வளர்த்தல் அனுமதிக்கப்பட்ட ஒன்று.

- "விவசாயம், கால்நடை பாதுகாப்பு மற்றும் வேட்டையாடுதல் ஆகியவற்றிற்கு மட்டும் நாய் வளர்க்கலாம்" என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:அப்துல்லாஹ் பின் உமர்(ரலி) நூல்: முஅத்தா, திர்மீதி

# மோட்சத்திற்கு வழி ஏகஇறைக் கொள்கை மட்டுமே!

படைத்தவனைத் தவிர மற்ற அனைத்தும் படைப்பினங்களே. படைப்பினங்களையோ அல்லது மனித கற்பனையில் உருவான எவற்றையோ கடவுளாக பாவித்து வணங்கும் செயல் இறைவனுக்கு இணைகற்பித்தல் என்று வழங்கப்படுகிறது. இந்த இணைகற்பிக்கும் செயல் ஏன் பெருபாவமாக இருக்கிறது என்பதன் காரணத்தை முந்தைய கட்டுரையில் கண்டோம்.

● நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் : "அடியார்கள் அல்லாஹ்வுக்குச் செய்யும் கடமை, அவனுக்கு எதையும் இணை கற்பிக்காமல் அவனை வணங்குவதாகும். அல்லாஹ் அடியார்களுக்குச் செய்யும் கடமை தனக்கு எதையும் இணை கற்பிக்காதவரை வேதனை செய்யாமல் இருப்பதாகும்." அறிவிப்பவர் : முஆத்(ரலி) நூல்: புகாரி

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)

● நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "யார் அல்லாஹ்வுக்கு எதையும் இணைகற்பிக்காமல் அவனை சந்திக்கிறாரோ அவர் சுவர்க்கம் புகுவார். யார் இணைகற்பித்தவராக சந்திக்கிறாரோ அவர் நரகம் புகுவார்" அறிவிப்பவர் :ஜாபிர் பின் அப்துல்லாஹ்(ரலி) நூல் : புகாரி

## இஸ்லாத்தின் முதல் தூண் ஏகத்துவக் கொள்கை

● இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "இஸ்லாம் ஐந்து (தூண்கள்)மீது நிறுவப்பட்டுள்ளது. (அவை:) அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவனுடைய தூதரும் ஆவார்கள் என்றும் உறுதிமொழி அளிப்பது தொழுகையைக் கடைப்பிடிப்பது ஜகாத் வழங்குவது இறையில்லம் கஅபாவில் ஹஜ் செய்வது ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பது. "

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) நூல் : முஸ்லிம்.

## இறை நம்பிக்கையின் முதல் நிலை ஏகஇறைக் கொள்கை

● இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "இறைநம்பிக்கை என்பது எழுபதுக்கும் அதிகமான அல்லது அறுபதுக்கும் அதிகமான கிளைகள் கொண்டதாகும். அவற்றில் உயர்ந்தது 'அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை" என்று கூறுவதாகும். அவற்றில் தாழ்ந்தது தொல்லை தரும் ஒரு பொருளைப் பாதையிலிருந்து அகற்றுவதாகும். நாணமும் இறைநம்பிக்கையின் ஒரு கிளைதான். "

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி) நூல் : முஸ்லிம்

## மறுமையில் ஓரிறைக் கொள்கையின் மகிமை

மறுமை நாளில் நமது புண்ணியங்களும் பாவங்களும் எடைபோடப்பட்டு அதன் அடிப்படையில் நமக்கு சொர்க்கமோ நரகமோ விதிக்கப்பட உள்ளன. அவையே நமது நிரந்தர இருப்பிடங்களாகும். ஆனால் இறைவனுக்கு இணைகற்பிக்காதவர்கள் எவ்வளவு பாவங்கள்

செய்திருந்தாலும் அவர்கள் செய்த பாவங்களுக்கான தண்டனைகளை அனுபவித்த பின்னரோ அதற்கு முன்னதாகவோ என்றாவது ஒருநாள் சொர்க்கம் சென்று விடுவார்கள். இதிலிருந்தே நாம் ஓரிறைக்கொள்கையின் மகிமையை விளங்கிக் கொள்ளலாம்.

● இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "இறை திருப்தியை நாடி "லாயிலாஹ இல்லல்லாஹ்" என்று எவரேனும் சொன்னால் இறைவன் நரகத்தை அவர் மீது தடை செய்து விடுகிறான்"

அறிவிப்பவர் : இத்பான் பின் மாலிக் (ரலி) (புகாரி )

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறெவருமில்லை" என்றும் "முஹம்மது அல்லாஹ்வின் அடியாரும் அவனுடைய தூதரும் ஆவார்" என்றும் "ஈசா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவனுடைய தூதரும் ஆவார்" என்றும், "அல்லாஹ் மர்யமை நோக்கிச் சொன்ன ("ஆகுக!" என்னும்) ஒரு வார்த்தை(யால் பிறந்தவர்)" என்றும், "அவனிடமிருந்து (ஊதப்பட்ட) ஓர் உயிர்" என்றும், "சொர்க்கம் (இருப்பது) உண்மை தான்" என்றும், "நரகம்(இருப்பது) உண்மைதான்" என்றும், எவர் (சொல்லால் உரைத்து, உள்ளத்தால் நம்பி) உறுதிமொழி கூறுகின்றாரோ அவரை இறைவன் அவரது செயல்களுக்கேற்ப சொர்க்கத்தில் புகுத்துவான்."

அறிவிப்பவர் உபாதா (ரலி) நூல் : புகாரி

## சொர்க்கவாசியைப் பார்க்க வேண்டுமா?

● கிராமவாசி ஒருவர் நபி (ஸல்)அவர்களிடம் வந்து, "நான் சொர்க்கம் செல்வதற்கேற்ற ஒரு (நற்) செயலை எனக்குக் கூறுங்கள்!" என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "நீர் அல்லாஹ்வை வணங்க வேண்டும் அவனுக்கு எதனையும் இணையாக்கக் கூடாது கடமையான தொழுகையையும் கடமையான ஜகாத்தையும் நிறைவேற்ற வேண்டும் ரமளானில்நோன்பு நோற்க வேண்டும்" என்றார்கள். அதற்கவர், ""என் உயிர் எவன் கையில்உள்ளதோ அவன் மேல் ஆணையாக! இதைவிட அதிகமாக வேறெதையும் செய்யமாட்டேன்" என்றார். அவர் திரும்பிச் சென்றதும் நபி (ஸல்) அவர்கள், "சொர்க்கவாசிகளில் ஒருவரைப் பார்க்க விரும்புவோர் இவரைப் பார்க்கட்டும்!" என்றார்கள்.

அறிவிப்பு: அபூஹுரைரா (ரலி) (புகாரி )

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எவர் தமது உள்ளத்தில் ஒரு வாற்கோதுமையின் அளவு நன்மை இருக்கும் நிலையில் "லாயிலாஹ இல்லல்லாஹ்" (அல்லாஹ்வைத்தவிர வேறு இறைவனில்லை) என்று சொன்னாரோ அவர் நரகத்திலிருந்து வெளியேறிவிடுவார். எவர் தமது இதயத்தில் ஒரு மணிக்கோதுமையின் அளவு நன்மை இருக்கும் நிலையில் "லாயிலாஹ இல்லல்லாஹ்" சொன்னாரோ அவரும் நரகத்திலிருந்து வெளியேறிவிடுவார். எவர் தமது உள்ளத்தில் ஓர் அணுவளவு நன்மை இருக்கும் நிலையில் "லாயிலாஹ இல்லல்லாஹ்" சொன்னாரோ அவரும் நரகத்திலிருந்து வெளியேறிவிடுவார். அறிவிப்பவர் : அனஸ் (ரலி) நூல் : புகாரி

# வீடுவரை ரகு! (தொடர்ச்சி)

ஓலா டாக்சி ஓட்டுனர் ரகுவரனோடு என் உரையாடல் தொடர்ந்தது...

"பூமிக்கு வந்த எல்லா உண்மையான இறைத்தூதர்களும் படைத்தவன மட்டும் வணங்குங்க படைப்பினங்களையோ எங்களையோ அல்லது வேறு எதையுமோ வணங்கீறாதீங்க அப்படீன்னுதான் மக்களுக்கு சொன்னாங்க. மக்களோடு மக்களா கடவுள் சொல்லிக்குடுத்த மாதிரி முன்மாதிரி வாழ்க்கையும் வாழ்ந்தாங்க. தர்மத்தை சமூகத்துல நிலைநாட்டினாங்க. ஆனா அவங்களோட இறப்புக்குப் பின்னாடி ஷைத்தான் மக்கள வழிகெடுத்து அந்த இறைத்தூதர்களையே வணங்க வெச்சுட்டான்."

"அதெப்படி பாய், புரில"

"ஷைத்தான்னா புரியுதில்லையா ரகு? அது ஒரு மறைவான கெட்ட சக்தி.. நம்ம மனசுக்குள்ள ஊடுருவி நம்மை வழிகெடுக்கும் அது. இந்த வாழ்க்கைங்கறது ஒரு பரீட்ச்சைதானே. அதனாலே ஷைத்தானுக்கும் சில சக்திய கடவுள் குடுத்து வச்சிருக்கான். இறைத்தூதர்கள் இறந்த பிறகு ரொம்ப காலத்துக்கு மக்கள் தர்மத்துலேயே நீடிச்சு இருப்பாங்க. இறைத்தூதர் ஒரு முன்மாதிரி மனிதராதானே இருந்தார்.. அவர்மேலே மக்களுக்கு ஒரு பாசம் இருக்கும். ஷைத்தானுடைய தூண்டுதலால சில மக்கள் நம்ம இறைத்தூதருக்கு ஞாபகார்த்தமா இருக்கட்டுமேன்னு ஒரு ஓவியம் வரஞ்சு வெப்பாங்க. அதுக்கு முன்னாடி மரியாதையா நிப்பாங்க. கொஞ்ச காலத்துக்குப் பின்னாடி அவருக்கு உருவச்சிலய வெச்சு வணங்கவும் ஆரம்பிச்சிருவாங்க. நிறைய பேர் சேர்ந்தா அதைச்சுற்றி கோவிலும் கட்டீருவாங்க..."

"புரியுது பாய்"

"இப்ப என்னாகுது பாருங்க. கடவுள மட்டும் வணங்குங்கன்னு சொன்ன இறைத்தூதரையே மக்கள் வணங்க ஆரம்பிச்சிருவாங்க. சிலை வழிபாடு ஆரம்பிக்கும்... இடைத்தரகர்கள் உள்ளே நுழையறாங்க.. கடவுள் பெயரால மூடநம்பிக்கை சுரண்டல் எல்லாமே ஆரம்பிக்கும். கடவுள நேரடியா வணங்கியபோது இருந்த இறையச்சம் மெல்லமெல்ல மறஞ்சு மக்கள் பாவத்துல மூழ்க ஆரம்பிச்சிருவாங்க.... இப்படி அதர்மம் தலைதூக்க ஆரம்பிச்சு கொடிகட்டிப் பறக்கும். இப்ப இறைவன் மறுபடியும் ஒரு புதிய தூதரை அனுப்பறான். அப்படி வர்றவர் மறுபடியும் மக்கள நேரான பாதைக்கு அழைப்பார். என்ன நடக்கும் தெரியுமா ரகு?"

"புரியுது பாய்... சில மக்கள் சத்தியத்த ஏத்துக்குவாங்க.. மத்தவங்க ஏத்துக்க மாட்டாங்க.. அப்படித்தானே பாய்?"

"ஆமா ரகு சிந்திக்கிற மக்கள் சத்தியத்த ஏத்துகிட்டு இறைத்தூதருக்கு பக்கபலமா இருப்பாங்க. ஆனா பெரும்பாலானவங்க அத ஏத்துக்க மாட்டாங்க. எங்க முன்னோர்கள் என்ன செஞ்சாங்களோ அதுதான் சரி. எங்களுக்கு பழைய மதமே போதும்னு சொல்லி அந்த மூடநம்பிக்கைலயே நீடிப்பாங்க. கொஞ்ச காலத்துக்குப் பின்ன புது இறைத்தூதரும் தருமத்த நிலைநாட்டிவிட்டுப் போவார். அவரோட மரணத்துக்குப் பின்னேயும் அதே

கதைதான். இவரையும் மக்கள் கடவுளாக்கி வழிபட ஆரம்பிச்சிருவாங்க. இப்படித்தான் ஒவ்வொரு காலத்திலேயும் வர்ற இறைத்தூதர்கள பிற்கால மக்கள் கடவுளாக்கிடறாங்க... இப்படித்தான் பலமதங்கள் உருவாச்சு ரகு. புரியுதா இப்ப?"

"புரியுது பாய்... இப்ப எது சரியானதுன்னு எப்படி கண்டுபிடிக்கிறது?"

"இத பாருங்க ரகு. அதர்மம் வந்து அந்த தூதர்கள் பெயராலயோ நாட்டுடைய பெயராலோ அறியப்படும். தர்மம் அதோட பண்பின் பெயரால் அறியப்படும்... தர்மம் படைத்தவன மட்டுமே வணங்கச் சொல்லும்.. அவன நேரடியா வணங்கச் சொல்லும்.. இடைத்தரகர் வேண்டாம்னு சொல்லும்.. மூட நம்பிக்கைகள் இருக்காது.. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கைல உறுதியா இருக்கும்.. அந்த அடிப்படைல எல்லா மனிதர்களையும் சமமா சகோதரனா பாவிக்கச் சொல்லும். எல்லா இறைத்தூதர்களையும் ஏத்துக்கணும், யாரையும் மறுக்கக் கூடாதுன்னு சொல்லும்... இன்னொண்ணு ரகு... உண்மை தர்மம் அப்படீங்கறது மதம் மதம்னு சொல்லி வெறும் சடங்கு மாதிரி இருக்காது. அது ஒரு மார்க்கம்... வாழ்க்கைநெறி... வாழ்க்கையோட எல்லா துறைகளிலேயும் வழிகாட்டும்.. சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு சொல்லும்.. இன்னும் இப்படியா அடுக்கிகிட்டே போலாம்.."

'புரியுது பாய்.. நிறைய யோசிக்க வெச்சிட்டீங்க.."

"ஆமா ரகு நிதானமா யோசிச்சுப்பாருங்க... அதுமட்டும் பத்தாது நேரான மார்க்கத்த எனக்கு காட்டுன்னு கடவுள்கிட்ட, அதாவது படச்சவன் கிட்ட ஆத்மார்த்தமா கேளுங்க. கண்டிப்பா அவன் வழிகாட்டுவான் பாருங்க"

"ஆமா பாய்.. மூணு விஷயங்கள்னு சொன்னீங்க. ரெண்டுதான் ஆச்சு.. இறைத் தூதர்கள் போதிச்ச மூணாவது விஷயம் என்ன?"

"மூணாவது விஷயம் இந்த உலக வாழ்க்கையோட நோக்கம் என்ன? இதுக்குப் பிறகு என்ன நடக்கும்? நாம எங்கே போறோம்? அப்படீங்கறது பற்றி ரகு.... இது பற்றி தெளிவில்லாம இருக்கறதும் பூமில பாவம் அதிகரிக்கறதுக்கு முக்கிய காரணம். மரணத்துக்குப் பின்னாடி ஒண்ணுமேயில்லன்னு மனு'ன் நினைக்கறதுனாலதான் பாவம் செஞ்சா தட்டிக் கேக்கறதுக்கு யாரும் இல்ல அப்படீங்கற நினைப்பு அவனுக்கு வருது, இல்லையா ரகு?"

"அதென்னமோ உண்மைதான்"

"தர்மத்தை பூமியிலே நிலைநாட்ட இந்த மறுமை வாழ்வு பற்றிய நம்பிக்கை ரொம்ப முக்கியம். நாம வாழ்ந்துகிட்டு இருக்கிற இந்த தற்காலிக வாழ்க்கை ஒரு பரீட்சை மாதிரி ரகு. இந்த உலகம்தான் அதுக்கான பரீட்சைக் கூடம் மாதிரி. நமக்கு ஒவ்வொருத்தருக்கும் எப்படி மரணம் இருக்கோ அதே மாதிரி இந்த உலகத்துக்கும் ஒரு முடிவு இருக்கு. கடவுள்கிட்ட இருந்து சிக்னல் வந்தா இந்த உலகம் முழுமையா அழிஞ்சிரும். அப்புறம் மறுபடியும் கட்டளை வரும்போது முதல் மனுஷர்ல இருந்து கடைசி மனுஷர் வரைக்கும் ஒருத்தர் விடாம எல்லோரும்

மறுபடியும் உயிரோட எழுப்பப்படுவாங்க. அதுக்குப் பிறகு நாம ஒவ்வொருத்தரும் செஞ்ச பாவம் புண்ணியம் எல்லாத்துக்கும் விசாரணை நடக்கும். புண்ணியம் ஜாஸ்த்தி இருந்தா அவங்க சொர்க்கம் போவாங்க.. பாவம் ஜாஸ்த்தி இருந்தா நரகம் போவாங்க.. அதுதான் மனிதனோட நிரந்தரமான இருப்பிடமா இருக்கும். ஆக அதை தீர்மானிக்கறதுக்குதான் இப்போ நாம வாழ்ந்துகிட்டு இருக்கற வாழ்க்கை... புரிஞ்சுதா ரகு?"

"நீங்க சொல்றது புரியுது பாய்... ஆனா மறுபடியும் உயிரோட வர்றது அப்படீங்கறதுதான் நம்பறதுக்கு கஷ்டமா இருக்கு"

(தொடரும் இன்ஷாஅல்லாஹ்)

# எச்சிலும் எரிச்சலும்!

சாலைகளில் அங்கிங்கெனாதபடி எங்கு நோக்கினும் எரிச்சலை ஏற்படுத்தும் எச்சில். கண்ட இடத்தில் காறித் துப்பும் கலாச்சாரம்! யாரைக் குறித்தும் யாரும் கவலைப்படுவதில்லை. சமூகப் பொறுப்புணர்வு என்பது எல்லோரிடத்திலும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது.

● **"ஒரு தினத்தின் அழகிய செயலைச் செய்பவர் யாரெனில் மனிதர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் ஒதுக்குப் புறமாக எச்சில் துப்புகின்றவர்" என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

மக்கள் வசிக்கும் வீதிகளில் குறிப்பாக மக்கள் அடர்த்தியாக வாழும் பகுதிகளுக்குச் சென்றால் இந்த நபிமொழி காற்றில் பறப்பதைக் கண்கூடாகக் காணலாம். சமூகப் பொறுப்புணர்வு என்பது எச்சில் துப்புவதில் இருந்து துவங்குகிறது என்பதை நம்மில் அனேகமானவர்கள் உணருவதே இல்லை.

பேருந்தின் முன் இருக்கையில் இருந்தவர் துப்பிய எச்சிலின் காரணத்தால் பின் இருக்கையில் இருந்தவருக்கும் அவருக்கும் வாய் தகராறு ஏற்பட்டு பின்னர் அது கைகலப்பாக மாறி கொலையில் முடிந்த சம்பவம் எல்லாம் நடைபெற்றுள்ளது.

● **நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "என் சமூகத்தின் நல்ல செயல்களும் தீய செயல்களும் எனக்கு எடுத்துக் காட்டப்பட்டன. அவற்றில் மூடப்படாத எச்சிலே தீய செயல்களில் பட்டியலில் அதிகமாக இருப்பதைக் கண்டேன்" (முஸ்லிம்)**

● இரவில் ஒருநாள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பள்ளிவசலுக்கு அருகே எச்சில் துப்பினார்கள். ஆனால் அதனை மூட மறந்து சென்றுவிட்டார்கள். வீட்டுக்குச் சென்ற பின்னரே தமது செயல் குறித்து நினைவு வந்தது. இரவு நேரம். உடனே தீப்பந்தம் ஒன்றை ஏந்தியவாறு பள்ளிவாசலுக்கு அருகே சென்று எச்சிலைத் தேடினார்கள். அதனைக் கண்டபின் மண்போட்டு மூடினார்கள். பின்னர் இவ்வாறு கூறினார்கள்:

**"இன்று இரவு என் வினைப்பட்டியலில் ஒரு குற்றச் செயல் பதிவு செய்யப்படுவதில் இருந்து என்னைப் பாதுகாத்த அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்" (ஃபத்ஹுல் பாரி)**

*நன்றி: நூஹ் மஹ்ழரி*

# தூய்மை பேணுதல் ஒரு ஆன்மீகக் கடமை

இங்கு கூறப்படும் எச்சரிக்கைகள் இவ்வுலகின் உரிமையாளனிடம் இருந்து வந்தவை. இந்த தூய்மை வழிமுறைகளைப் பேணுவது ஒவ்வொரு குடிமக்கள் மீதும் கடமையாகிறது. சமூகப் பொறுப்புணர்வோடு இவற்றைப் பேணும்போது சமூக நலன் காக்கப்படும். இறைவனிடம் இருந்து நற்கூலியும் கிடைக்கும். பேணாதவர்கள் சமூக நலனுக்கு ஊறு விளைவிக்கிறார்கள். இன்றில்லாவிடினும் மறுமையில் அதற்காக அவர்கள் தண்டனை அனுபவிக்கப்போவது உறுதி!



### பொது இடங்களில் கழிவுப்பொருள்

பொது இடங்களான சாலை ஓரங்கள், இரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள் ஆகியவற்றை அசுத்தப்படுத்துவதன் மூலம் பலர் மக்களின் சாபத்திற்கு ஆளாகிறார்கள். அவ்விடங்களைக் கடந்து செல்வது மக்களுக்குப் பெரும் சிரமத்தை ஏற்படுத்தும்போது அவர்களின் வாய் முணுமுணுக்கவே செய்யும். அவ்வாறு அசுத்தம் செய்யக்கூடாது என்ற எச்சரிக்கைப் பலகைகள் தொங்க விடப்பட்டிருந்தாலும் பெரும்பான்மையான மக்கள் அதைக் கண்டும் காணாததுபோல் நடந்து கொள்கிறார்கள்! பெரும்பான்மை செய்கிறார்கள் என்பதற்காக சமூகம் இதை அலட்சியம் செய்யக் கூடும். ஆனால் இறைவனின் பார்வையில் இது தவறு என்பதால் அதற்கான தண்டனை உரியவர்களுக்கு கிடைக்கவே செய்யும்.

● ஒருமுறை அவர்கள், ‘சாபத்தைப் பெற்றுத் தரும் இரு காரியங்களை விட்டு விலகிக் கொள்ளுங்கள்“ என்று கூறினார்கள். மக்கள், “சாபத்தைப் பெற்றுத் தரும் அந்த இரண்டு விஷயங்கள் என்ன?‘ என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், ‘‘மக்கள் (செல்லும்) பாதையில் இயற்கைத் தேவையை நிறைவேற்றுதல். அல்லது அவர்கள் நிழலாறக் கூடிய இடத்தில் இயற்கைத் தேவையை நிறைவேற்றுதல்“ என்று கூறினார்கள். அபூஹுரைரா (ரலி) - முஸ்லிம்

பொது இடங்களில் குப்பை மற்றும் நாற்றம் வீசும் கழிவுப்பொருள்களைக் கொட்டுவோருக்கும் இந்த எச்சரிக்கை பொருந்தும் என்பது சொல்லித் தெரியவேண்டியது இல்லை.

### சிறுநீர் கழித்தாலும் சுத்தம் தேவை

சுற்றுப்புற சூழல் மாசடையாமல் பாதுகாக்கப்பட வேண்டுமானால் தனிநபர் உடல் தூய்மை பற்றிய கல்வியும் விழிப்புணர்வும் மிக அவசியமானதாகும். உதாரணமாக சிறுநீரைப் பொறுத்தவரையில் அது அசுத்தமான ஒன்று என்ற உணர்வு பெரும்பாலானோருக்குக் கிடையாது. உடலிலோ உடையிலோ இருப்பிடங்களிலோ மலம் பட்டுவிட்டால் பொதுவாக அனைவரும் முக்கியத்துவம் கொடுத்து சுத்தம் செய்வதைப் பார்க்கிறோம். ஆனால் சிறுநீருக்கு இதே முக்கியத்துவம்

கொடுக்கப்படுவதில்லை.

பள்ளிகளிலும் சரி, வீடுகளிலும் சரி, பொதுமக்களுக்கு இடையிலும் சரி இதுபற்றி போதிக்கப்படுவது இல்லை. இதன் காரணமாக வீடுகளில் குழந்தைகள் சிறுநீர் கழித்தாலோ பெரியவர்கள் சாலை ஓரங்களிலும் சுவர்களிலும் சிறுநீர் கழித்தாலோ அவற்றை யாரும் பொருட்படுத்தப்படாத நிலை தொடர்கிறது. சிறுநீரும் கழித்த பின் சுத்தப்படுத்தப் படவேண்டிய விஷயமே என்பதை மக்கள் உணராததன் காரணமாக வீடுகளிலும் சாலைகளிலும் சிறுநீரின் நாற்றத்தையும் அதன்மூலம் உண்டாகும் சுகாதார சீர்கேடுகளையும் நாம் சகித்துக் கொண்டே வாழவேண்டியுள்ளது. ஆனால் தூய இறைமார்க்கமோ வழிபாட்டின் ஒரு முக்கியப் பகுதியாக சிறுநீர் பற்றிய பேணுதலைக் கற்பிக்கிறது. குழந்தைகள் ஏழு வயதில் இருந்தே அந்தப் பேணுதலுக்குப் பழக்கப்படுத்தப் படுகிறார்கள்.



## சுத்தமின்றி வழிபாடு இல்லை

இறைவிசுவாசிகளுக்கு கடமையாக்கப்பட்ட தினசரி ஐவேளைத் தொழுகைகளை நிறைவேற்றுவதற்கு உடல், உடை, இடம் இவை அனைத்தும் மலம் மற்றும் சிறுநீரில் இருந்து தூய்மையாக இருக்கவேண்டும் என்ற வரையறை உள்ளது. ஆண் குழந்தைகளுக்கு செய்யப்படும் “கத்னா“ எனப்படும் பிறப்புறுப்பின் முன்தோல் நீக்கும் அறுவை சிகிச்சைக்கு வேறு சில காரணங்கள் இருந்தாலும் அது முக்கியமாக சிறுநீரில் இருந்து உடலையும் உடையையும் தூய்மையாக வைத்திருக்கும் பொருட்டே நிறைவேற்றப் படுகிறது.

● “சுத்தம் இறைநம்பிக்கையில் பாதியாகும்” என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அபூ மாலிக் அல்அஷ்அரீ நூல் : முஸ்லிம்)

● இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஒரு தோட்டத்தைக் கடந்து சென்றார்கள். அப்போது அவர்கள், “இந்த சமாதிகளில் அடங்கியுள்ளவர்கள் வேதனை செய்யப்படுகிறார்கள். பெரிய (குற்றம்) ஒன்றுக்காக இவர்கள் தண்டிக்கப்படவில்லை. மாறாக அவர்களில் ஒருவன் சிறுநீர் கழித்து விட்டுத் தூய்மை செய்யாதவனாக இருந்தான். மற்றொருவன் கோள் சொல்லித் திரிபவனாக இருந்தான்“ என்று கூறினார்கள். (இப்னு அப்பாஸ்(ரலி) - நஸயீ )

## அசுத்தம் நீக்குதலும் ஓர் வணக்கமே!

● ’இறை நம்பிக்கை என்பது எழுபதுக்கும் அதிகமான கிளைகளை கொண்டதாகும். அவற்றில் உயர்ந்தது ‘இறைவனைத் தவிர வேறு வணக்கத்துக்கு உரியவன் இல்லை என்று கூறுவதாகும். அவற்றில் தாழ்ந்தது, தொல்லை தரும் பொருளைப் பாதையிலிருந்து அகற்றுவதாகும். வெட்கமும் இறை நம்பிக்கையின் ஒரு கிளையாகும்“ என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) நூல்: முஸ்லிம்

# கத்னா எனும் விருத்தசேதனம்

ஆண் உறுப்பில் முன் பாகத்தில் உள்ள தோல் பகுதியை சிறு அறுவை சிகிச்சை மூலம் வெட்டிக்கொள்வதே விருத்தசேதனம் என்று அழைக்கப்படுகிறது. கத்னா எனும் விருத்த சேதனம் செய்வது இறைதூதர் இப்ராஹீம் (அலை) அவர்களின் வழக்கமாகத் துவக்கப்பட்டது.

● **"இப்ராஹீம்(அலை) அவர்கள் எண்பது வயதிற்குப் பிறகு விருத்தசேதனம் செய்துகொண்டார்கள். அவர்கள் 'கதூம்' (எனும் கூரிய ஆயுதத்தின்) மூலமாக விருத்தசேதனம் செய்து கொண்டார்கள்" என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.**

**அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) (நூல்கள்: புகாரி, அஹ்மத்).**

முஸ்லிம்கள், யூதர்கள், கிருஸ்துவர்கள் ஆகிய மூன்று சமயத்தவருக்கும் பெரும் பாட்டனாராகிய இப்ராஹீம் (அலை) அவர்களது முன்னுதாரணத்தைப் பின்பற்றியே இன்று வரை கத்னா செய்துகொள்வது வழக்கில் உள்ளது. நபி (ஸல்) அவர்கள் இறைத்தூதராக ஆவதற்கு முன்பே மக்கத்துக் குரைஷியரும் மதீனாப் பகுதிகளில் குடியேறி வாழ்ந்துவந்த யூதர்களும் விருத்தசேதனம் செய்துகொள்ளும் வழக்கமுடையோராக இருந்துள்ளனர்.

கத்னா செய்யாமலும் ஒருவர் இஸ்லாத்தில் இணைந்து முஸ்லிமாக இருக்க முடியும். ஆயினும், கத்னா செய்வது வலியுறுத்தப்பட்ட ஓர் இயற்கை வழிமுறையாகும்.

● **"விருத்தசேதனம் செய்வது, மர்ம உறுப்பின் முடியைக் களைந்திட சவரக் கத்தியை உபயோகிப்பது, அக்குள் முடிகளை அகற்றுவது, நகங்களை வெட்டிக் கொள்வது, மீசையைக் கத்தரித்துக் கொள்வது ஆகிய ஐந்து விஷயங்களும் இயற்கை மரபுகளில் அடங்கும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) (நூல்கள்: புகாரீ, முஸ்லிம்)**

**மருத்துவ பார்வையில் விருத்தசேதனம்..**

மருத்துவ மற்றும் வாழ்வியல் ரீதியாக இந்த விருத்தசேதனம் மிகவும் பலனுள்ள ஒரு நடவடிக்கை என்பதை ஆராய்வோரும் அனுபவிப்போரும் அறிவார்கள். முக்கியமாக சிறுநீர் கழித்தல் தாம்பத்திய உறவு இவற்றிற்குப் பிறகு உடல், உடை தூய்மை பேண விரும்புவோர் இதன் பயனை அனுபவித்து அறிகிறார்கள்.

உலகிலே குழந்தை மருத்துவத்தின் மிக உயர்ந்த அமைப்பான American Academy Of Pediatrics என்னும் குழந்தை மருத்துவத்திற்கான அமெரிக்க அகாடமி, விருத்தசேதனம் செய்துகொள்வதால் அதிக மருத்துவ பயன்கள் உள்ளன என்று 2012 இல்தான் ஆய்வு செய்து உறுதிபடுத்தியுள்ளது. விருத்தசேதனம் செய்த ஆணுறுப்பை அழுக்குகள், நுண்கிருமிகள் ஆண்குறியின் நுனியில் சேர்வதைத் தடுத்துக் கொள்ளமுடியும். அதற்காக தனியொரு அக்கறை எடுத்துக் கொள்ள தேவையில்லை. சர்வ சாதாரணமாகவே சுத்தமுடனும், சுகாதாரத்துடனும் விருத்தசேதனம் செய்த ஆணுறுப்பைப் பராமரித்துக் கொள்ளமுடியும் என்று அமெரிக்க அகாடமி தெரிவிக்கின்றது.

# பிணவறைக்குள் (Mortuary) படிப்பினைகள்!

கருவறையில் இருந்து தொடங்கி கல்லறை வரை மனிதன் எத்தனை எத்தனை அறைகளைக் கடந்து செல்கின்றான்!. பிரசவ அறை, தொட்டில்... கழிப்பறை, குளியல் அறை, படுக்கை அறை என்பன தொடங்கி... பள்ளிக்கூடம், பரிசோதனைக் கூடம், கல்லூரி, அலுவலகம், தொழிற்சாலை என பற்பல அறைகளைக் கடந்து பயணிக்கின்றான். தன் இறுதி அறை கல்லறை என்று தெரிந்த போதும் அந்த உணர்வே இல்லாமல் வாழ்கின்றான். உயிர் பிரிந்து போய்விட்டால் அதுதான் தன் கதையின் இறுதி என்ற உணர்வோடு வாழ்பவர்கள் பலர். ஆனால் அங்கிருந்துதான் உண்மை வாழ்வு நிரந்தர நிலையான வாழ்வு தொடங்குகிறது என்கிறது திருக்குர்ஆன்:

- **இன்னும் மறுமை நாள் வந்தே தீரும் அதில் சந்தேகமே இல்லை (என்பதற்கும் இது ஒரு சான்றாகும்). மேலும், மண்ணறைகளில் உள்ளவர்களைத் திண்ணமாக அல்லாஹ் எழுப்புவான். (திருக்குர்ஆன் 2:7)**

- **ஆக ஒவ்வொரு மனிதனும் மரணத்தைச் சுவைக்க வேண்டியவனாய் இருக்கின்றான். நீங்கள் அனைவரும் உங்களுடைய கூலியை மறுமைநாளன்றுதான் முழுமையாகப் பெறுவீர்கள். (அங்கு) எவன் நரக நெருப்பிலிருந்து காப்பாற்றப்பட்டு, சுவனத்தில் நுழைவிக்கப் படுகின்றானோ அவனே உண்மையில் வெற்றி பெற்றவன் ஆவான்! இவ்வுலக வாழ்வென்பது ஏமாற்றக்கூடிய அற்ப இன்பமேயன்றி வேறில்லை! (திருக்குர்ஆன் 3:185)**

இன்றைய நவீன உலகில் மனிதன் கடந்து செல்லும் அறைகளில் ஒன்றாக மாறியிருக்கிறது பிணவறை! காரணங்கள் நாம் அனைவரும் அறிந்தவையே! பிணவறைக்குள் சென்ற ஒருவரின் அனுபவம் எப்படி இருக்கும்? படித்துத்தான் பார்ப்போமே!

-------------------------------

அந்த நண்பருடன் சேர்ந்து பிணவறை (Mortuary) க்குள் சென்றேன்!

துர்நாற்றங்களில் கொடியது மனிதன் இறந்த பின் அவனிடம் இருந்து வருவதுதான், என்னிடம் கேட்டால் இந்த உலகத்திலுள்ள எந்த நாற்றத்தையும் அதற்கு ஒப்பாக்க முடியாது..

அந்த பிணவறைக்குள் மனிதனும் அவன் உயிருடன் வாழும் பொழுது உபயோகித்த வாசனை திரவியங்களும் எங்கே என்று தேடினேன் காணவில்லை...

என் நண்பரின் நெருங்கிய நண்பர்தான் அங்கு பிணங்களை கூறுபோடுபவர். படிப்பினைக்காக உலகில் எத்தனையோ பிரபலமான, அதிவிஷேடமான இடங்களுக்கு பணம் செலவழித்து சென்றிருப்போம் . என்னை கேட்டால் இந்த உலகத்தின் ஒட்டுமொத்த படிப்பினையும் அடங்கிய ஒரே இடம் பிணவறைதான் என்றால் மிகையாகாது .

முதல் சடலமாக ஒரு வாலிபன்தான் இருந்தான். வாய்த் தகராறில் கத்தியால் குத்தப்பட்டிருந்தான். அதை பரிசோதிக்க அவனது சடலம்

அங்கு வைக்கப்பட்டிருந்தது... மார்புப்பகுதியில் இருந்து அடி வயிறு வரை பிளந்து உள் இருக்கும் அனைத்து குடல்கள், இரைப்பை போன்றவற்றை வெளியே எடுத்தார்கள், பின் அவரின் கழுத்திலிருந்து முகத்தை முழுதுமாக உரித்து அதை தூக்கி அவரின் தாடியுடன் வேறாக வெட்டி வைத்து பின் மரணத்திற்கான காரணம் கிடைத்த பின் பழையவாறே தைத்துவிட்டார். இன்னும் அங்கே பலவிதமான நிலையில் பலவிதத் கோர தோற்றங்களோடு மனித உடல்கள்.... அதோ அங்கே வாகன விபத்தில் சிக்கி உடல் சிதைந்த நிலையில் சாக்கு மூட்டையில் அள்ளிப் போடப்பட்டு கொண்டுவரப்பட்ட சடலம்! கட்டு பிரிக்கப்படாமல் இருந்தது..

மனம் அலறியது.... ஒ... அழகிய உருவில் தெருக்களில் உலா வந்த உருவங்களா இவை?

● **திண்ணமாக, நாம் மனிதனை மிகச் சிறந்த அமைப்பில் படைத்தோம். (திருக்குர்ஆன் 95:4)**

என்று இறைவன் கூறிய மனிதர்களா இவர்கள்?

இன்னும் சுற்றிப் பார்த்தால், வாலிபர்கள், வாலிப பெண்கள் எல்லாம் இதே நிலமைகளில் கிடக்கிறார்கள் ...

அந்த இடத்தில் என் சிந்தனை ஓட்டம் இவ்வாறு இருந்தது... இவர்கள் உயிரோடு வாழ்ந்த காலத்தில் எவ்வளவோ பெருமை அடித்திருப்பார்கள்.. பணம் தந்த செருக்கால் தங்களைத் தாங்களே உயர்வாக காட்டிக் கொண்டு வலம் வந்திருப்பார்கள்... ஏழைகளை அண்டவிடாமல் தடுத்திருப்பார்கள்.. உடல் அழகால் அந்நிய ஆண்களை அல்லது அந்நியப் பெண்களை கவர்ந்திருப்பார்கள்... கள்ளக் காதல்களும் விபச்சாரமும் எல்லாம் நிறைவேறி இருக்கும்... வலுவான உடற்கட்டு கொண்டு நலிந்தவர்களை அடித்திருப்பார்கள்... ஆதிக்கம் செய்திருப்பார்கள்..

இப்போது அந்த நாவுகள் எங்கே? .. கண்கள் எங்கே? .. கரங்கள் எங்கே? .. விபச்சாரம் புரிந்த மர்மஸ்தானங்கள் எங்கே? எல்லாம் இங்கு அக்குவேறு ஆணிவேறாக அல்லவா பிரிக்கப்பட்டுக் கிடக்கின்றன?

நடிகர்களை நடிகைகளை அவர்களின் முக அழகில் மயங்கி அவர்களைத் தங்களின் தலைவர்களாக பாவித்து வருபவர்கள் அவர்களை இங்கு காண நேர்ந்தால் அவர்கள் மீது மதிப்பு தோன்றுமா?

ஆள்தெய்வங்களின் காலடியில் கட்டுண்டு கிடந்தவர்கள் தங்கள் 'தெய்வங்கள்' அக்குவேறு ஆணிவேராகிக் கிடக்கும் கோலத்தைக் கண்டால் இன்னும் அவர்களையே கடவுளாக பாவிப்பார்களா?

காதலியின் அழகை கவிதையாக வடித்தவனுக்கு இங்கும் கவிதை உதிக்குமா?

அழகான தோலைக் கொண்டு நம் உடல் அங்கங்கள் அனைத்தையும் மூடிவைத்துள்ளான் இறைவன். அழகான ஆடைகளைக் கொண்டு அதை நாம் மறைக்கிறோம் நம் கண்ணியத்தைக் கூட்டுவதற்காக. ஆனால் நாகரீகம் என்ற பெயரில் அந்த ஆடைகளைக் குறைத்தும் இறுக்கமான உடைகள் அணிந்தும் தங்களைக் கவர்ச்சிப் பொருளாக மாற்றிக் கொள்கிறார்கள் இன்றைய பெண்கள். இறுதியில் கற்பை இழந்து

காதலனால் கைவிடப்பட்டு பெற்றோர்களால் புறக்கணிக்கப்பட்டு தற்கொலைகளில் தஞ்சம் புகுந்தவர்களும் இங்கே உண்டு! இதோ ஒரு மூலையில் கவனிப்பாரற்றுக் கிடக்கும் அவலம்!

வாலிப இள ரத்தம் ஏற்றிய முறுக்கில் தன்னைத் தட்டிக்கேட்க யாரும் இல்லை என்ற இறுமாப்பில் மது, கஞ்சா, விபச்சாரம்... என்று அலைந்து திரிந்தவர்களும் இங்கு அடைக்கலம் கண்டுள்ளார்கள்.. ஆனால் உயிரற்ற நிலையில்...

மாணவர்களுக்கு பாடம் புகட்டுவதற்காக எத்தனையோ அருங்காட்சியகங்கள் உலகில் உண்டு... பல முக்கியமான நகரங்களில், நுண்கலைகள், பயன்படு கலைகள், கைப்பணி, தொல்லியல், மானிடவியல், இன ஒப்பாய்வியல், வரலாறு, பண்பாட்டு வரலாறு, படைத்துறை வரலாறு, அறிவியல், தொழில்நுட்பம், இயற்கை வரலாறு, நாணயவியல், தாவரவியல், விலங்கியல், போன்ற துறைகளுக்காகத் தனித்தனியான அருங்காட்சியகங்கள் இருப்பதைக் காண முடியும். ஆனால் அவை அனைத்தையும்விட இந்தப் பிணவறை கற்பிக்கும் பாடங்கள் நெஞ்சில் நீக்கமற நிறைந்திருப்பவையாக அமையக்கூடும்... சிந்தித்து உணரக்கூடிய மக்களுக்கு!

# வாசகர் எண்ணம்

- ஜூலை இதழ் வெகு சிறப்பாக உள்ளது.. மனமாற்றமும் குணமாற்றமுமே இஸ்லாம் என்ற தலைப்புக் கட்டுரைகள் அருமை. இறை அருளால் நாளுக்கு நாள் இதழ் மெருகேறி வருகிறது... அல்ஹம்து லில்லாஹ்.. எல்லாப் புகழும் இறைவனுக்கே - **ஷேக் தாவுது, ஈரோடு.**

- இதழ் கிடைக்கப்பெற்றேன். அனைத்து கட்டுரைகளும் அருமை. ஐஎஸ்ஐஎஸ் பற்றிய கார்டூன் ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகள் இஸ்லாமியர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தியதற்கு நன்றி. அவர்கள் நடத்திய கொடூரங்கள் காரணமாக உலகெங்கும் பொதுமக்களிடையே இஸ்லாம் ஒரு தீவிரவாதிகளின் மதம் என்ற தவறான புரிதல் ஏற்பட்டுள்ளது. உண்மையில் நல்லொழுக்கத்தையும் உயர்ந்த வாழ்வியல் தத்துவங்களையும் போதிக்கும் இஸ்லாத்தை பின்பற்றுவோர் எப்படி இவர்களைப்போல் கொடூரர்களாக இருக்க முடியும்?

  - **ஏ சி பிரபாகரன், பெங்களூரு**

- மாவீரன் துமாமாவின் மனமாற்றம் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் அருமை. - **நசீர், திருச்சி**

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

# வானவர்கள் பற்றிய சில தகவல்கள்

இந்த விசாலமான பிரபஞ்சத்தில் மனிதன் வாழும் பூமி என்பது அற்பத்திலும் அற்பமான ஒரு கோளம் என்பதை நாம் அறிவோம். ஒரு மாபெரும் தூசுப்படலத்தில் ஒரு சிறிய தூசு போன்றது நம் பூமி. அதன் மீது ஒட்டிக்கொண்டு வாழும் மற்றொரு நுண்ணிய துகள் போன்றவர்கள் நாம். நமக்கு கொடுக்கப்பட்டுள்ள ஐம்புலன்களுக்கு எட்டும் தகவல்களும் அற்பமானவையே. அவற்றைக் கொண்டு நாமும் நம் முன்னோர்களும் சேர்ந்து பகுத்தறிந்தவையே மனித அறிவு என்பது. ஆனால் அதை வைத்துக்கொண்டு இப்பிரபஞ்சத்தில் அனைத்தைப் பற்றியும் மனிதன் அறிவான் அல்லது அவனால் அறிய முடியும் என்று யாராவது கூறினால் அது அறியாமையின் அப்பட்டமான வெளிப்பாடே!

உண்மையில் மனிதகுலத்திற்கு எட்டிய அறிவு என்பது இன்னும் எட்டாமல் மறைவாக உள்ள அறிவோடு ஒப்பிடும்போது கடலில் ஒரு துளி என்று கூட சொல்வதும் மிகைப்படுத்தப்பட்ட உண்மையே. எனவே நம் புலன்களுக்கு எட்டாத விஷயங்கள் பற்றி இறை வேதங்களும் இறைத் தூதர்களும் சொல்லும்போது இதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். அவ்வாறு சொல்லப்படும் ஒரு விடயமே வானவர்கள் அல்லது மலக்குகள் என்பது. இவர்களைப் பற்றி திருக்குர்ஆனும் நபிமொழிகளும் எவ்வளவு சொல்கின்றனவோ அவ்வளவு மட்டுமே நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

'மலக்' என்ற அரபுச்சொல்லுக்கு வானவர் என்பது பொருளாகும்.. இதன் பன்மை 'மலாயிக், மலாயிகா என்பதாகும். 'மலக்' என்ற சொல் குர்ஆனில் பதிமூன்று இடங்களிலும் 'மலகைன்' என்று இருமையாக இருதடவைகளும், 'மலாயிகா' என்று பன்மையில் 73 தடவைகளும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

## வானவர்கள் என்றால் யார் ?

● **"வானவர்கள் ஒளியினாலும், ஜின்கள் நெருப்பினாலும், ஆதம் (என்னும் முதல் மனிதர்) உங்களுக்கு விளக்கியவாறு (மண்ணினாலும்) படைக்கப்பட்டவர்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி) (முஸ்லிம், அஹ்மத்)**

ஒளியினால் படைக்கப்பட்ட இவர்கள் ஆண்களுமல்ல பெண்களுமல்ல! வானவர்கள் இறைவனின் கூட்டாளிகள் அல்ல. அல்லது அவனுடைய துணைவர்களும் உதவியாளர்களும் அல்ல. அவனுடைய குழந்தைகளும் அல்ல. எனினும் ஒருவர் அவர்களை நேசிப்பதும் மதிப்பதும் கட்டாயமாகும். இவர்களுக்கு ஊண், உறக்கம் எதுவும் கிடையாது.

## இறைகட்டளைகளை நிறைவேற்றுபவர்கள்

அவர்கள் எப்போதும் இறைவனின் கட்டளைப்படியே நடப்பவர்கள். ஒருபோதும் அவனை மீறி நடக்கவோ மாறு செய்யவோ மாட்டார்கள். அவர்களுக்கு இடப்பட்ட கட்டளைகளை தவறாது செய்து முடிப்பார்கள்.

● **அவர்கள் தங்களுக்கு மேலுள்ள தங்கள் இறைவனுக்குப் பயந்து, தங்களுக்கு இடப்பட்ட கட்டளையையே செய்து கொண்டிருக்கின்றார்கள்.**

**(திருக்குர்ஆன் 16.50)**

*நரகத்தை காவல் காக்கும் வானவர்களைப் பற்றி இறைவன் கூறும்போது*

**● இறைவிசுவாசிகளே! உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் (நரக) நெருப்பை விட்டுக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் அதன் எரிபொருள் மனிதர்களும், கல்லுமேயாகும் அதில் கடுமையான பலசாலிகளான மலக்குகள் (காவல்) இருக்கின்றனர் அல்லாஹ் அவர்களை ஏவிய எதிலும் அவர்கள் மாறு செய்ய மாட்டார்கள் தாங்கள் ஏவப்பட்டபடியே அவர்கள் செய்து வருவார்கள். (திருக்குர்ஆன் 66:6)**

## இறைவனைத் துதிப்பவர்கள்

*அவர்கள் தங்கள் நேரங்களை இறைவனை வணங்குவதற்கும், அவனுக்குக் கீழ்ப்படிவதற்கும், அவனைத் துதிப்பதற்கும் புகழ்வதற்கும் செலவழித்து வருகிறார்கள்.*

**● அவர்கள் இரவு பகல் எந்நேரமும் இடைவிடாது அவனைப் போற்றிப் புகழ்ந்துகொண்டே இருக்கின்றார்கள். (அல்குர்ஆன் 21.20)**

## வானவர்களின் எண்ணிக்கை.

*வானவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது பற்றிய தகவலும் நமக்கு சொல்லப்படவில்லை. 'மி∴ராஜ் எனும் விண்ணேற்றப் பயணத்தின் போது நபிகளாருக்கு மறைவுலக நிகழ்வுகள் காண்பிக்கப்பட்டன. அவற்றைப் பற்றி கூறும்போது இவ்வாறு கூறினார்கள்:*

**● மிஃராஜ் பயணத்தின்போது ' வானவர்கள் தொழுமிடமான பைத்துல் மஃமூர்' என்ற இடத்திற்கு உயர்த்தப்பட்டபோது "இது எந்த இடம்?" என என்னை அழைத்துச்சென்ற வானவர் ஜிப்ரீலிடம் கேட்டேன். இது 'பைத்துல் மஃமூர்' என்ற இடமாகும். இங்கு ஒவ்வொரு நாளும் 70,000 வானவர்கள் உள்ளே செல்வார்கள். சென்றவர்கள் மிண்டும் திரும்பி வருவதில்லை.**

**(அறிவிப்பவர்: மாலிக் இப்னு ஸஃஸஆ, நூல்: புகாரி முஸ்லிம்.)**

## வானவர்களின் உருவம்

*வானவர்கள் ஒளியிலிருந்து படைக்கப்பட்டவர்கள் என்றாலும் அவர்களைப் பார்க்க முடியாது. தங்களை உருமாற்றிக்கொள்கிற ஆற்றலை இறைவன் அவர்களுக்கு வழங்கியுள்ளான். அந்த உருவங்களில் அவர்கள் தென்படுவார்கள். மர்யம் (அலை) அவர்களிடம் ஒரு வாலிபரின் தோற்றத்தில் ஜிப்ரீல் வந்து சென்றதை அல்லாஹ் கூறுகிறான்:*

**● தம் மக்களின் முன் திரையிட்டுக் கொண்ட சமயத்தில் (ஜிப்ரீல் என்னும்) நம்முடைய தூதரை அவரிடம் அனுப்பி வைத்தோம். அவர் முழுமையான ஒரு மனிதருடைய தோற்றத்தில் அவர் முன் தோன்றினார்.(அவரைக் கண்டதும்,) 'நிச்சயமாக நான் உம்மிடமிருந்து என்னைப் பாதுகாக்க ரஹ்மா(ன் ஆகிய அளவற்ற அருளாள)னிடம் பிரார்த்திக்கிறேன். நீர் இறைவனுக்கு அஞ்சியவராக இருந்தால் (இங்கிருந்து வெளியேறி விடுவீராக!)" என்றார். அதற்கவர், 'பரிசுத்தமான ஒரு மகனை உமக்குக் கொடு(க்கப்படும் என்பதை உமக்கு அறிவி)ப்பதற்காக நான் உம்முடைய இறைவனால் அனுப்பப்பட்ட ஒரு (வானவத்) தூதர்தான்" என்றார். (அல்குர்ஆன் 19.17..19)**

*இவ்வாறு மனித உருவில் வரும் வானவர்களை இறைத்தூதர்கள் நேரில்*

பார்த்தும் பேசியுமுள்ளனர். இப்றாஹீம் (அலை) அவர்களிடம் வானவர்கள் மனித உருவத்தில் விருந்தினராக வந்தபின் லூத் நபியிடம் சென்றபோது லூத் நபியின் மக்களும் பார்த்தனர் என்ற செய்தியை திருக்குர்ஆனில் காண முடிகிறது. (உதாரணம் 11.69 வசனம்)

நபிகளாரிடம் வானவர் ஜிப்ரீல் அவர்கள் மனிதத் தோற்றத்தில் வந்து செல்வதை நபித்தோழர்களும் பார்த்துள்ளனர்.

● இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "ஜிப்ரீல் (அலை) அவர்கள் திஹ்யத்துல் கல்பி என்ற நபித்தோழரின் உருவத்தில் வருவார்கள்." (அஹ்மத்)

# திருக்குர்ஆன் கற்றுத்தரும் பிரார்த்தனைகள்

● "வானங்களையும் பூமியையும் படைத்தவனே! இம்மையிலும் மறுமையிலும் நீயே என் பாதுகாவலன் முஸ்லிமாக (உனக்கு முற்றிலும் வழிபட்டவனாக இருக்கும் நிலையில்) என்னை நீ கைப்பற்றிக் கொள்வாயாக! இன்னும் நல்லடியார் கூட்டத்தில் என்னைச் சேர்த்திடுவாயாக!" (திருக்குர்ஆன் 12:101)

● ("என்) இறைவனே! தொழுகையை நிலைநிறுத்துவோராக என்னையும், என்னுடைய சந்ததியிலுள்ளோரையும் ஆக்குவாயாக! எங்கள் இறைவனே! என்னுடைய பிரார்த்தனையையும் ஏற்றுக் கொள்வாயாக!" (திருக்குர்ஆன் 14:40)

● "எங்கள் இறைவா! என்னையும், என் பெற்றோர்களையும், இறைவிசுவாசிகளையும் கேள்வி கணக்குக் கேட்கும் (மறுமை) நாளில் மன்னிப்பாயாக" (திருக்குர்ஆன் 14:41)

**பெற்றோருக்காக பிள்ளைகள் பிரார்த்தனை:**

● "என் இறைவனே! நான் சிறு பிள்ளையாக இருந்த போது, என்னை(ப்பரிவோடு) அவ்விருவரும் வளர்த்தது போல், நீயும் அவர்களிருவருக்கும் கிருபை செய்வாயாக!" (திருக்குர்ஆன் 17:24)

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**
**சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9840527687 (பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்: 9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி: 9842627171 கோவை: 9600800050 திருப்பூர்: 9150068919 குன்னூர்: 9843622246 ஊட்டி: 9843927014 ஈரோடு: 7373947869, 9942958888 உடுமலை: 9865051917 பழனி : 9894278528 பொள்ளாச்சி: 9843657426 சேலம்: 9994091364 திருச்சி: 9865446344, 9442709087 மதுரை: 9789341714 கும்பகோணம்: 9597285160 விழுப்புரம்: 9790290002 திருநெல்வேலி: 9786230030 தென்காசி :9443695979 வேலூர்: 9944656942 திருவண்ணாமலை: 9994564650, 9944905212 தூத்துக்குடி: 8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்: 9043758656 கே.ஜி.எ.ஃ.ப்: 9845217262**

# வானவர்களின் செயல்பாடுகள்

வானவர்களில் சிலருடைய பெயர்களையும் அவர்களின் பணிகளையும் இறைவன் நமக்கு அறிவித்துள்ளான்.

● உதாரணமாக வானவர் ஜிப்ரீல்(அலை) அவர்களின் பணி இறைச்செய்தியை எடுத்துச் சென்று சேர்ப்பதாகும்.

**நபியே, (இறைவனின் கட்டளைப்படி) ரூஹுல் அமீன் (என்னும் ஜிப்ரீல்) இதனை உம் உள்ளத்தில் இறக்கி வைத்தார். (மனிதர்களுக்கு) நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்ய வேண்டும் என்பதற்காக. (அல்குர்ஆன் 26.193,194)**

● மறுமை நாள் ஏற்படும்போது சூர் ஊதுகின்ற பொறுப்பில் இஸ்ராஃபீல் எனும் வானவர் உள்ளார்.

● மழை பொழிவிப்பதும் விளைவிப்பதும் மீகாயீல் எனும் வானவரின் பொறுப்பு.

● ஒவ்வொரு மனிதருடனும் இரண்டு வானவர்கள் எப்போதும் உள்ளார்கள். அவர்கள் மனிதருடைய நல்ல, கெட்ட செயல்களைப் பதிவு செய்கிறார்கள்.

**வலப்புறத்தில் ஒருவரும், இடப்புறத்தில் ஒருவருமாக இருவர் (அவன் செய்யும் செயலைக்) குறிப்பெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். (அல்குர்ஆன் 50.17)**

● மரணத்தின் நேரத்தில் மக்களின் உயிர்களைப் பறிக்கின்ற பொறுப்பு மரணத்தின் வானவருக்கு (மலக்குல் மவ்த்) வழங்கப்பட்டுள்ளது.

**(நபியே!) நீர் கூறும்: 'உங்கள் மீது (உங்கள் இறைவனால்) சாட்டப்பட்டிருக்கும் மலக்குல் மவ்த் (என்ற மரண வானவர்)தான் உங்களுடைய உயிரைக் கைப்பற்றுகின்றார். பின்னர், உங்கள் இறைவனிடமே நீங்கள் கொண்டு வரப்படுவீர்கள்.' (அல்குர்ஆன் 32.11)**

● மனிதர்களைப் பாதுகாக்கும் வானவர்களும் உள்ளனர்.

● (மனிதன் எந்த நிலைமையிலிருந்த போதிலும்) அவனுக்கு முன்னும் பின்னும் தொடர்ந்து வரக்கூடிய (வானவர்கள்) பலர் இருக்கின்றார்கள். அவர்கள் அல்லாஹ்வுடைய கட்டளையைக் கொண்டு அவனைப் பாதுகாக்கின்றார்கள். (அல்குர்ஆன் 13.11)

● நரகத்தின் அதிகாரி மாலிக் எனும் வானவர்.

**(நரகவாசிகள் நரகத்தின் அதிபதியை நோக்கி,) 'மாலிக்கே! உம் இறைவன் எங்களுடைய செயலை முடித்து விடட்டும். (மரணத்தின் மூலமாயினும் எங்களுக்கு விடுதலை கிடைக்கட்டும்)" என்று சப்தமிடுவார்கள். அதற்கவர், '(முடியாது!) நிச்சயமாக நீங்கள் இதே நிலைமையில் (வேதனையை அனுபவித்துக் கொண்டே மரணிக்காது) இருக்க வேண்டியதுதான்" என்று கூறுவார். (அல்குர்ஆன் 43.77)**

● சொர்க்கத்தின் பொறுப்பாளர் ரிள்வான் எனும் வானவர்

● மண்ணறையில் விசாரிப்பவர்கள் முன்கர், நகீர் என்பவர்கள்

இப்படி வேறு வானவர்களும் உண்டு. ஒவ்வொருவருக்கும் பணிகள் உண்டு. குர்ஆனிலும் நபிமொழிகளிலும் அவற்றில் சில குறிப்பிடப்பட்டுள்ளன. சில குறிப்பிடப்படவில்லை.

# இஸ்லாமிய சகோதரர்கள் கவனத்திற்கு

திருக்குர்ஆன் நற்செய்தி மலர் மாத இதழ் பற்றிய சில தகவல்களை குறிப்பாக இஸ்லாமிய வாசகர்களோடு- நாங்கள் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறோம்.

1. இஸ்லாம் பற்றிய தவறான கருத்துக்களை நம் சகோதர சமுதாய மக்களின் உள்ளங்களில் இருந்து களையவும் நாட்டு மக்களிடையே நல்லிணக்கத்தையும் நல்லுறவையும் உண்டாக்கவும் தமிழகமெங்கும் திருக்குர்ஆன் தமிழாக்கத்தின் அன்பளிப்புப் பிரதிகள் மாற்றுமத அன்பர்களுக்கு வழங்கப்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். அவ்வாறு திருக்குர்ஆனைப் பெற்றுக்கொண்ட மாற்றுமத வாசகர்களின் வாசிப்புக்காக இந்த இதழ் உருவாக்கப்பட்டு நடத்தப் பட்டு வருகிறது.

2. சில இஸ்லாமிய சகோதர சகோதரிகளிடம் நன்கொடை பெற்று எங்களிடம் பதிவு செய்து கொண்ட மாற்றுமத அன்பர்களுக்கு இவ்விதழ் இலவசமாக அனுப்பபட்டு வருகிறது.

3. ஆர்வம் காட்டும் இஸ்லாமிய சகோதரர்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. நான்கு மாதங்கள் இலவசமாகவும் தொடர்ந்து வேண்டுவோரிடம் இதழ் ஒன்றுக்கு ரூபாய் 10 என்ற முறையிலும் வசூலிக்கப்படுகிறது.

4. சந்தா அனுப்புவோர் குறைந்த பட்சம் இரண்டு வருட சந்தா அதாவது ரூபாய் 240 அனுப்பவேண்டுகிறோம்.

5. பிரதி ஒவ்வொரு மாதமும் இதழை உங்கள் முகவரியும் 25 பைசா தபால் தலையும் ஒட்டி ஒட்டு மொத்தமாக 4500 இதழ்களை நமது தபால் துறையின் பத்திரிகைப் பிரிவு மூலம் அனுப்பி வருகிறோம்.

6. எங்களிடம் பதிவான முகவரிகள் அனைத்துக்கும் எங்கள் தரப்பில் இருந்து தவறாமல் அனுப்பி வருகிறோம். இதழின் நோக்கம் மக்களுக்கு இறைவனின் செய்தியை சொல்லி சீர்திருத்துவதும் அதன்மூலம் இறைவனிடம் நற்கூலி பெறுவதுமே என்பதால் நீண்ட நாளாக சந்தா அனுப்பாத நபர்களுக்கும் இதழைத் தொடர்ந்து அனுப்பி வருகிறோம். இங்கு வியாபார நோக்கம் அறவே கிடையாது என்பதையும் நாங்கள் தெளிவு படுத்திக்கொள்ள விரும்புகிறோம்.

7. அஞ்சலில் இவ்வாறு அனுப்பப்படும் இதழ்கள் உங்களை வந்து சேராவிட்டால் உங்கள் அருகாமை தபால் அலுவலகத்தில் சென்று விசாரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். தபால் துறை இதற்கு எந்த உத்தரவாதமும் தருவதில்லை. இதழ்கள் தொடர்ச்சியாக வரவில்லை என்றால் உங்கள் சந்தா எண் மற்றும் முகவரியைக் குறிப்பிட்டு **QNM NOT RECIEVED** என்று 9845373775 அல்லது 9886001357 என்ற எண்களுக்கு **SMS** செய்யுங்கள். இங்கு தபால் துறை அதிகாரிகளிடம் கொண்டு செல்ல முயற்சிக்கிறோம் இன்ஷாஅல்லாஹ்.

8. இதழை கூரியர் அஞ்சலில் பெற விரும்புபவர்கள் அவர்கள் அதற்கான தொகையை கணக்கிட்டு சந்தாவுடன் சேர்த்து அனுப்பினால்

அவர்களுக்கு கூரியர் தபாலில் அனுப்பி வைக்கிறோம் இன்ஷாஅல்லாஹ்.

9. கீழ்கண்ட முறைகளில் நீங்கள் சந்தா அனுப்பலாம்:

1. வங்கி மூலம் :

**House Of Peace, ICICI bank, Indra Nagar branch, Bangalore.**

**Account no. 016901013432**

**IFScode: ICIC0000169**

2. மணிஆர்டர்:

**House of Peace, 501, 3rd cross, Syed block, near Rizwan masjid, Annasandra palaya, HAL post, Bangalore -560017**

3. **PAYTM** மூலம்: இங்கு காணப்படும் **QR CODE** ஐ **SCAN** செய்து உங்கள் தொகையை செலுத்தலாம். தொடர்ந்து **9845373775** என்ற எண்ணுக்கு உங்கள் சந்தா எண் மற்றும் தொகை குறிப்பிட்டு **SMS** மூலம் தகவல் அனுப்பவும்.

10. இறைவனின் பொருத்தம் கருதி இப்பணிக்காக மேற்கொண்டு நன்கொடைகள் அனுப்ப விரும்பினால் மேற்படி வங்கிக் கணக்கிற்கு அனுப்பி உடனடியாக தகவலும் தெரிவித்தால் நலம். உங்கள் ஜகாத் தொகையை இதற்கு அனுப்புவதைத் தவிர்க்கவும்.

ஏக இறைவனின் பெயரால்...

# பெருநாள் சகோதரத்துவ சங்கமம்

**நாள் : 28.08.2018 செவ்வாய் கிழமை (இறைவன் நாடினால்)**

**காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை**

**இடம் : கோல்டன் மஹால், சிங்காரத்தோப்பு, திருச்சி-8.**

**நிகழ்ச்சியில்...**

- **சொற்பொழிவு: இஸ்லாம் கூறும் இறை வணக்க வழிபாடு**
- **இஸ்லாம் குறித்த கேள்விகளுக்கு பதில்**
- **விருந்து உபசரிப்பு**
- **அனைத்து மத சகோதர, சகோதரிகள் குடும்பத்துடன் வருக! வருக! இறையருளைப் பெறுக!**

**நிகழ்ச்சி ஏற்பாடு: சமூக சகோதரத்தவ இஸ்லாமிய பேரவை அறக்கட்டளை. திருச்சி. தொடர்புக்கு : 94427 09087**

# மனைவி என்ற காதலியே..!

கட்டிலில்
கலைந்து கிடக்கும் உன்
துயில்
கலைக்க சம்மதமில்லை!
அதிகாலையில்
அசந்து தூங்கும் உன்னை
அரட்டியெழுப்ப விருப்பமில்லை!
இருந்தாலும்
எழுந்திரு என் சிநேகிதியே...
என் உயிரின் பாதியே...!

உனக்கான என் காதல்
என்பது
இவ்வுலகோடு மட்டுமே
முடிந்திடுமானால்
உறங்கட்டுமேயென
விட்டிடுவேன்...!
உன்னை...
மறுமைக்காய் தயார்
செய்கிறேன்
கொஞ்சம் ஒத்துழை!!

நான் கொஞ்சம் கண்
அயர்ந்தால்
என்னை கடிந்துகொள்!
கண்டி!
காது திருகு!
கடைசியாய் என்னை
எழுப்பிவிடு...!
இருவரும் இணைந்தே
பஜ்ரு தொழலாம்!!!

எனக்காக நீயும்
உனக்காக நானும்
ஒருவருக்காக ஒருவர
இறைவனிடம்
பிரார்த்திக்கலாம்...

கொஞ்சும் உன் குரலில்
கொஞ்சம் குர்ஆன் ஓது!
மடியில் தலை வைத்து..
உன் நெடிய விரல்களை
நீட்டி மடக்கியபடி
தஸ்பீஹ் செய்கிறேன் நான்!!

என் தலைகோதி விட்டபடி
புன்னகைக்கிறாய்!
எனக்கே எனக்கென்று நீ
தயாரித்து வைத்திருக்கும்
அந்த புன்னகைக்குள்
தொலைந்துபோகிறேன் நான் !!

காதலியாகிய மனைவியே ...
உனக்கொன்று தெரியுமா?
இப்படியே நாம்
இணைந்திருந்த
நொடிகளுக்கெல்லாம்
இருவருக்கும்
இறைவன் புறம் கூலி உண்டு!
கரும்பு திண்ணக் கைக்கூலி
நமக்கு!!

ஆறு மணிக்கெல்லாம் உன்
ஆவி பறக்கும் தேநீர் கொடு!
அருகருகே அமர்ந்து
பருகிக்கொண்டே
நேற்றை போல்
இன்றுமோர் பொழுது
செய்வோம்...!!!

--திருமதி ஹப்ஸா அப்துல்
ஹலீம்
(பஜ்ரு - அதிகாலைத்
தொழுகை,
தஸ்பீஹ் - துதிச்சொற்கள்)

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn. No. KRNA/BGE/1057/2018-2020
Posted at BANGALORE PSO, Mysore Road , Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of Pages: 24+4
Licenced to post without prepayment . License No. WPP-308
Date of Publication: 25th of every month

To **(PRINTED MATTER)**

..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

# கொடுத்ததை சொல்லிக் காட்டாதீர்கள்!

"அல்லாஹ்வின் பாதையில் எவர் தங்கள் செல்வத்தைச் செலவிட்ட பின்னர், அதைத் தொடர்ந்து அதைச் சொல்லிக் காண்பிக்காமலும், அல்லது (வேறு விதமாக) நோவினை செய்யாமலும் இருக்கின்றார்களோ அவர்களுக்கு அதற்குரிய நற்கூலி அவர்களுடைய இறைவனிடத்தில் உண்டு, இன்னும் அவர்களுக்கு எத்தகைய பயமுமில்லை அவர்கள் துக்கமும் அடையமாட்டார்கள்." -(குர்ஆன் 2:262)





 ஜமாஅத்துல் ஜன்னா அறக்கட்டளை, செல் : 99419 38217, 9710120600

அல்லாஹ் என்றால் "வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்" என்பது பொருள்